2016 ஆகஸ்ட் 31]

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மல்லிநாயனபள்ளி ஊராட்சி, மல்லிநாயனபள்ளியிலே ஒரு தாய், சேய் நல விடுதி 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இன்றுவரை தாய், சேய் நல விடுதியாகவே இருக்கிறது. மல்லிநாயனபள்ளியைச் சுற்றி சுமார் 20 கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அங்கிருந்து ஏதாவது அவசர சிகிக்சைக்காக செல்ல வேண்டும் என்று சொன்னால், 20 கி.மீ. தொலைவிலுள்ள கிருஷ்ணகிரிக்குத்தான் வந்தாக வேண்டும். இல்லையென்று சொன்னால், 15 கி.மீ. தொலைவிலுள்ள மேச்சகாளாச்சின்னம்பள்ளிக்குப் போக வேண்டும். அது, கிருஷ்ணகிரி-குப்பம் மெயின் ரோடில் இருக்கிறது. ஆகவே, அந்த தாய் சேய் நல விடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவாரா என தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தாய், சேய் நல விடுதிகளை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துகின்ற கொள்கை இல்லை. உரிய விதிமுறைகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் செய்வதாக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடங்களிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவங்குவது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

128—

சிற்றுந்து

3781—திரு. ப. சத்திய நாராயணன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2016 ஆகஸ்ட் 31

(அ) சென்னையிலுள்ள மேற்கு மாம்பலம் லேக் வியூ சாலையிலிருந்து கோயம்பேடு மற்றும் எழும்பூர் இரயில் நிலையத்திற்கு சிற்றுந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு நேரம் இல்லை. இன்றைக்கு 3 மந்திரிகள் மானியக் கோரிக்கையில் பதில் சொல்ல வேண்டும். உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்வான இலட்சியம் கொண்டு, தெளிவான பார்வை கொண்டு, நேர்மையான வெற்றி கொண்டு ஆட்சி நடத்தும் அற்புதத் தலைவி, அதிசயத் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அகிலமே நாளும் வியக்கும் தலைவி, அரசியல் அரங்கின் பாசத் தலைவி, நேசத் தலைவி, எங்கள் அம்மா, அம்மா, அம்மா. கட்சியையும், ஆட்சியையும் இரண்டு கண்ணாய் காணும் நேர்மை, தந்தை பெரியார், தன்மானம் காத்த அண்ணா, ஈகை நாயகன் எம்.ஜி.ஆர் அவர்கள் காட்டிய பாதையில் தடம் புரளாமல் நடத்தும் தர்மத் தாயின் வாக்கே மக்களுக்கு கீதை, அம்மாவின் 100 நாள் சாதனைகள் அகிலத்திற்கே சொல்லும் போதனை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தற்போது மாநகரப் போக்குவரத்துக் கழகம் அசோக் பில்லர் பகுதியிலிருந்து மாம்பலம் இரயில் நிலையம், லேக் வியூ சாலை, லிபர்ட்டி வழியாக மகாலிங்கபுரம் வரை இரண்டு சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, மேற்கு மாம்பலம் லேக் வியூ சாலை பகுதிவாழ் மக்கள் மேற்குறிப்பிட்ட வழித்தடத்தில் இயக்கப்படும் இரண்டு சிற்றுந்துகளைப் பயன்படுத்தி லிபர்ட்டி பேருந்து நிறுத்தம் வந்தடைந்தால், அந்நிறுத்தம் வழியாக இயக்கப்படும் பேருந்துகளைப் பயன்படுத்தி கோயம்பேடு மற்றும் எழும்பூர் இரயில் நிலையம் சென்றடையலாம் என்பதை தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 31]

திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக தனது அறிவாற்றலைப் பயன்படுத்தி அறிவுப் பேரொளியான எங்கள் அன்னையே, தங்களின் தியாகப் பயணத்தில் கல்லையும், முள்ளையும் கண்டு அஞ்சாமல். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு 3 மந்திரிகள் பதில் சொல்ல வேண்டும். உட்காருங்கள்.*

திரு. ப. சத்திய நாராயணன்: *உங்களால் நான், உங்களுக்காகவே நான் என (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலனை தனது நலன் என கருதி, மக்களுக்காகவே பணியாற்றி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வேண்டி வணங்குகிறேன்.*

தி. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேற்கு மாம்பலத்திலுள்ள லேக் வியூ சந்திப்பிலிருந்து அயோத்தியா மண்டபம் வழியாக கோயம்பேடு செல்ல ஒரு தனி சிற்றுந்தும் மற்றும் எழும்பூர் இரயில் நிலையத்திற்குச் செல்ல ஒரு சிற்றுந்து இயக்கவும், தமிழ்நாட்டிலே மாண்புமிகு அம்மாவின்மீது அதிக பற்றும், பாசமும் நிறைந்த மேற்கு மாம்பலம் பகுதி பொது மக்களின் வேண்டுதலுக்கு இணங்க, இந்த இரு வழித்தடங்களில் சிற்றுந்து இயக்கவும் மேற்கு மாம்பலம் பொது மக்களின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வேண்டி வணங்குகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு மாம்பலம், லேக் வியூ சாலை பகுதிவாழ் பயணிகள் தடம் எண் S30 என்ற சிற்றுந்தின்மூலம் லிபர்ட்டி பேருந்து நிலையம் வந்தடைந்தால், பயணிகள் அந்நிறுத்தம் வழியாக மாநகரப் போக்குவரத்துக் கழக தடம் எண் 27C, அதாவது தியாகராய நகர் முதல் திருவேற்காடு வரை இயக்கப்படும் 29 பேருந்துகள், தடம் எண் M27 தியாகராய*

[2016 ஆகஸ்ட் 31

நகரிலிருந்து சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரை இயக்கப்படும் 6 பேருந்துகள் மற்றும் தடம் எண் 12B சென்னை புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து பட்டினப்பாக்கம் வரை இயக்கப்படும் 11 பேருந்துகள் என மொத்தம் 46 பேருந்துகளைப் பயன்படுத்தி கோயம்பேடு சென்றடையலாம்.

அதேபோல, மேற்கு மாம்பலம், லேக் வியூ சாலை பகுதிவாழ் பயணிகள் தடம் எண் S30 என்ற சிற்றுந்தின்மூலம் லிபர்ட்டி பேருந்து நிறுத்தம் வந்தடைந்தால், பயணிகள் அப்பேருந்து நிறுத்தம் வழியாகச் செல்லும் தடம் எண் 17D, கே.கே. நகரிலிருந்து பிராட்வே வரை 27 பேருந்துகள், தடம் எண் 17E சாலிகிராமத்திலிருந்து பிராட்வே வரை 14 பேருந்துகள், தடம் எண் 17K தசரதபுரத்திலிருந்து பிராட்வே வரை 2 பேருந்துகள், தடம் எண் 17C ஐயப்பன்தாங்கல் முதல் பிராட்வே வரை ஒரு பேருந்து என ஆக மொத்தம் 44 பேருந்துகளைப் பயன்படுத்தி எழும்பூர் இரயில் நிலையம் சென்றடையலாம். எனவே, மேற்கு மாம்பலம், லேக் வியூ சாலைப் பகுதியிலிருந்து கோயம்பேடு மற்றும் எழும்பூர் இரயில் நிலையத்திற்கு பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதிகள் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றி. தியாகராய நகர் பொது மக்கள் பயன்பெறும்வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 100 ஆம் நாள் பரிசாக தியாகராய நகர் பகுதி மக்களுக்கு மினி பஸ் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]